Registered as News Paper          பக்கங்கள் 04          விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM          PEOPLES DAILY          மக்கள் தினசரி

நாதம்: 02     திருவள்ளுவர் ஆண்டு 2022     ஐப்பசி 06     (23-10-1991)     புதன்கிழமை     ஓசை: 247

## கணக்கு கிடைக்காமையால் கட்டுநிதி தாமதமாம்

மாவட்டக் கல்வித் திணைக்களங்களிலிருந்து முன்னைய மாதங்களில் சம்பளம் வழங்கியமைக்கான மாதாந்தக் கணக்குப் பொழிப்புகள் உரிய காலத்தில் வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு கிடைப்பதில்லை. இதனால் ஆசிரிய சம்பளக் கொடுப்பனவுக்கான கட்டுநிதி உரிய காலத்தில் அனுப்பி வைக்க முடியாதுள்ளதாகவும், இக்கால தாமதத்தை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சகல பிராந்திய மற்றும் கோட்டக் கல்வி அதிகாரிகளையும் கேட்டுள்ளார். இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் கோட்டங்களில் (4 ஆம் பக்கம் பார்க்க)

# 'செஞ்சோலை' புரட்சிக் கல்வியின் பரிசோதனை களம்

## தலைவர் பிரபாகரன்



(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை இல்லம் ஒரு புதிய, புரட்சிகரக் கல்வியின் பரிசோதனைக் களமாக அமைய வேண்டும் மனிதப் பற்றும், மக்கள் பற்றும் கொண்ட ஒரு புதிய அறிவுசார் பரம்பரையை உருவாக்கிக்கொள்ள வேண்டும். சுபீட்சகரமான தமிழீழ சமுதாயத்தைப் படைக்கும் தேச நிர்மாணிகளை தோற்றுவிக்க வேண்டும். இவ்வாறு செஞ்சோலை சிறுவர் இல்லத் திறப்பு விழாவிற்கு தலைவர் பிரபாகரன் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் உன்னத பணியை இலட்சியமாகக் கொண்ட செஞ்சோலைச்சிறுவர் இல்லம் இன்று திறக்கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த செஞ்சோலை வளாகத்தில் நாம் இன்று இந்த இளம் விதைகளை பயிரிட்டு பெற்றோர், இலவலேர் விட்டு வளர்த்து, விழுதுவிட்ட பரட்பி விருட்சங்களாக மாறி, ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டுமென்பதே எனது ஆவல்.

இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கௌதாரிமுனையில் தரையிறக்கம்

# புலிகள் - இராணுவம் கடும்மோதல்

## வீரவணக்கம்

### வாசன், சரவணையாளன் ஜெகன்

சிறீமனவப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று ஏற்பட்ட மோதலொன்றில் வாசன் (பரமலிங்கம் யசோதரன் - மானிப்பாய்), மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா [4 ஆம் பக்கம் பார்க்க]

## சங்குப்பிட்டி இறங்குதுறைக்கு இராணுவம் வந்தது

(பூநகரி)

கௌதாரிமுனைக்கும், பள்ளிக்குடாவிற்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியில் நேற்று அதிகாலை தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் கடும் எதிர்ப்பிற்கும் மத்தியில் சங்குப்பிட்டி இறங்குதுறை வந்து சேர்ந்தனர். இராணுவத்தினரின் இத் தரையிறக்கத்தின் போதும், நகர்வின்போதும் சிறிலங்கா பீரங்கிப்

## முகமட் சபாநாயகராக இருக்கும்வரை

### எந்தவொரு கூட்டத்திலும் கலந்து கொள்வதில்லை

## பாதுகாப்பு வலயத்திற்கு மேலாக எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை 11 மணியளவில் ஏவப்பட்ட எறிகணைகள் பாதுகாப்பு வலயத்தின் மேலாகச் சென்று நீராவியடிப் பகுதியில் வீழ்ந்து வெடி

மேற்படி எறிகணைத்தாக்குதலினால் நீராவியடிப் பகுதியில் ஒரு வீடு பலத்த சேதமடைந்துள்ளது. வீட்டுக்காரர் பதுங்கு குழிக்குள் இருந்ததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

## கலந்து கொள்வதில்லை

(டில்லி)

சபாநாயகர் எம். எச் முகம்மட் தலைவராக இருக்கும் வரை எந்த ஒரு பாராளுமன்ற கூட்டத்திலும் கலந்து கொள்ளப்போவதில்லை என எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. அவ்வறிக்கையில் மேலும் திரு எம் எச் முகம்மட் நடத்தும் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களில் எடுக்கப்படும் முடிவுகள் தம்மைக் கட்டுப்படுத்தாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முக்கிய எதிர்க்கட்சிகளான

4ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினரிடம் சிக்கியோரை விடுவித்துத் தர உறவினர் செ. சிலுவையிடம் கோரினர்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்குண்டிருப்பவர்களை விடுவிப்பதற்காக அவர்களது உறவினர்கள் செஞ்சிலுவைச் சமிதியின் உதவியை நாடியுள்ளனர். பெரும்பாலும் முதியவர்களும் மற்றும் நோயாளர்களாகவும் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர இயலாமல் போய்த் தீவகத்தில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்குண்டிருக்கும் இவ் அப்பாவிப் பொதுமக்களை விடுவிப்பதற்காக இவர்களது உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

...பிட்டி இறங்குதுறை வந்து சேர்ந்தனர். இராணுவத்தினரின் இத் தரையிறக்கத்தின் போதும், நகர்வின் போதும் சிறிலங்கா பீரங்கிப் படகுகளும், விமானப்படை குண்டுவீச்சு விமானங்களும் அக்கரையோரப் பகுதிகளில் கடும் குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன.

கௌதாரி முனையின் தெற்குக் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா பாரிய கப்பற்படை படகிலிருந்து பதினைந்திற்கும் மேற்பட்ட சிறிய படகுகளின் உதவியுடனும் வாகனங்களை கரைக்கு ஏற்றிவரும் கப்பலின் உதவியுடனும் ஐந்நூறுக்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரும் பல கவச வாகனங்களும் தரையிறக்கப்பட்டன. நேற்று அதிகாலையில் இத்தரையிறக்கம் இடம்பெற்றது.

(4ம் பக்கம் பார்க்க)

# நேற்று காலையும் மாலையும் யாழ். நகர் மீது குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானம் நடத்திய குண்டுவீச்சினால் நான்கு சகோதரர்களின் வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 5-30 மணியளவில் கொட்டடிப் பகுதியை அவ்ரோ, வேவு விமானம், ஹெலி ஆகியன பல தடவைகள் நோட்டமிட்டன. அதன்பின் அப்பகுதியில் அவ்ரோ விமானம் பீப்பாக் குண்டை வீசியது. இதனால் ஒரே வளவில் அமைந்திருந்த க. பாலச்சந்திரன், க. போசச்சந்திரன், பொ. முருகவேல் ஆகிய சகோதரர்களது வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து மீண்டும் மாலை மூன்று மணியள...

(4ஆம் பக்கம் பார்க்க)

## கௌதாரிமுனையில் வீடுகள் தீப்பற்றின

நேற்று அதிகாலை கல்முனைக் கடற்பரப்பில் இருந்து சிறிலங்கா பீரங்கிப் படகுகளும், விமானப்படை குண்டுவீச்சு விமானங்களும் மேற்கொண்ட தாக்குதலினால், கல்முனை பிசாசு ஓடை, கௌதாரிமுனை ஆகிய இடங்களில் உள்ள வீடுகள் பல

[4ஆம் பக்கம் பார்க்க]

...மேலாகச் சென்று நீர்வேலியடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

...தால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. அதேவேளை சொத்துக்கள் சேதமாகியுள்ளன.

## களுத்துறைச் சிறையில் 200 தமிழர் உண்ணாவிரதம்

களுத்துறையில் இருக்கும் சிறைச்சாலையில் எந்தவித மான விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இருநூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் மீது குற்றப் பத்திரிகை எத

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் பராமரிப்பு நிலையம் செஞ்சோலை நேற்று திறப்பு

"செஞ்சோலை" சிறுவர் பராமரிப்பு நிலையம் நேற்று மாலை 3-00 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய செய்தியாளரை சிறிலங்கா வெளியேற்றியது சரியான நடவடிக்கை அல்ல

### - அஜித்குமார் பாஞ்சா

சிறிலங்கா அரசு கொழும்பிலிருந்த அனைத்திந்திய வானொலிச் செய்தியாளரை வெளியேற்றியது சரியான நடவடிக்கை அல்ல என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் அஜித்குமார் பாஞ்சா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமூகத்தின் இன்னல்களை மாணவர் மறக்கக் கூடாது

### -துணைவேந்தர் துரைராசா

(யாழ்ப்பாணம்)

இன்றைய காலகட்டத்தில் எமது சமுதாயம் பல இன்னல்களையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளது. நீங்கள் கற்றுக் கொள்ளும் வெளிவாரிப் பட்டப் படிப்பு உங்களை இச்சமுதாயத்தில் அக்கறை கொள்ள வைக்கும் என நம்புகின்றோம். இக்கல்வியைக் கற்பதன் மூலம் எம்சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள இன்னல்களை மறக்க மாட்டீர்கள் என நாம் நம்புகிறோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெளிவாரிப் பட்டப் படிப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. துரைராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது இந்தக் கல்வியைக் கற்று நீங்கள் பட்டம் பெறுவதோடு நின்றுவிடாமல் எமது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வழிமுறைகளைக் கடைப்பிடிப்பீர்கள் என நம்புகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சரித்திரத்தில் இந்த வைபவம் மிக முக்கியமானது. உள்ளும், வெளியும் அனைத்து மாணவர்களும் ஒரே நிலையில் கற்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பு கற்கும் மாணவர்கள் ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கற்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் இங்கு ஆங்கிலமும் கற்க முடியும் என்றார். (தி)

## பீரங்கி தாக்கு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப்பகுதி மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடாத்தியிருக்கின்றனர்.

நேற்று முன்தினமிரவு முதல் நேற்று நண்பகல் வரை இத்தாக்குதல்கள் இடையிடையே நடாத்தப்பட்டன. இத்தாக்குதலினால் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவலில்லை.

# கறுப்ப சாமி விவகாரம் இந்தியா - சிறிலங்கா நெருடல்

(கொழும்பு)

இந்திய வானொலியிலும், தூரதர்சனிலும் வெளிவந்த செய்திகளால் சிறிலங்காவிற்கும் இந்தியாவுக்குமிடையிலான நல்லுறவுகள் பாதிப்படையச் செய்யலாம் என்பதாலேயே இச்செய்திக்கு காரணமான திரு. கறுப்ப சாமியை வெளியேற்றியதாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சகம் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் அண்மைக் காலத்தில் இந்தியப் பத்திரிகைகள் ஜனாதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஜீவிதா**
**தொழில் நுட்பக் கூடம்**

ரீ வி. டெக், றேடியோ, மணிக்கூடு, மின்விசிறி மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோஸ்டில் படப்பிடிப்பாளர்களும். புதிய பழையபாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம். யாழ்ப்பாணம். (B/3289

### அடையாள அட்டையைப் பெறவும்

(புங்குடுதீவு)

தீவுப் பகுதி அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சின்னம்மா நாகராசா என்பவரது. 347230960 V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்-புகையிரத நிலைய அரசிமுனையில் இயங்கிவரும் 'தீவக மக்கள் நலன் காக்கும் பிரிவு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி மேற்படி அலுவலக பொறுப்பாளரிடம் அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (22)

### தீவக மக்களுக்கு நியாயவிலையில் பொருள்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புங்குடுதீவுக் கிளைகளில் பொருட்கள் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகளுக்கு பொது யாழ்ப்பாணத்தில் நியாய விலையில் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ள தற்காலிக கிளைகளில் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு பத்து கிலோ வெள்ளையரிசி இரண்டு கிலோ சீனி, ஒரு கட்டி 'சின்லைற்' சவர்க்காரம் என்பன வழங்கப்படுகின்றன. அரிசி பதின்மூன்று ரூபா என்பது சதத்திற்கும்,

### நவம்பர் 4 இல் விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழகத்தின் 90/91 கல்வி ஆண்டுக்கான கலைப்பீட விரிவுரைகள் திட்டமிட்டபடி நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று இப்பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

தாவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்

# இராணுவத்தின் முயற்சிகளை முறியடிக்க தயாராகவுள்ளோம்

- பரா

சிறிலங்கா அரசாங்கம் வானொலி மூலமும் பத்திரிகைகள் மூலமும் வடபகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற் கொள்வதாக கூறி மக்களை உள ரீதியாக இனி சொல்லச் செய்து அகதிகளாகச்செய்வதற்கே பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றது.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற லெப். கேணல் சந்தோசம் மாஸ்டரின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அரியாலை செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத்திட்டமைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு யாழ் மாவட்ட மக்கள் கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஆனையிறவில் திறந்த பிரதேசத்தில் 26 நாட்கள் இராணுவத்தினருடன் போராடினோம். அந்த அளவுக்கு வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை எதிர் கொள்ளவும் எமது போராளிகள் தயார் நிலையிலேயே இருக்கிறார்கள்.

மேலும் இதுவரை நாம் 3500 போராளிகளை இழந்துள்ளோம். அவர்களில் ஒருவன் தான் லெப். கேணல் சந்தோசம். இமக்குமாகாணத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னின்று செயற்பட்டதோடு பல்வேறு இராணுவ திட்ட செயல்முறைகளை கையாண்டு வெற்றி பெற்றவன் லெப். கேணல் சந்தோசம் எனக் குறிப்பிட்டவர்.

இக்கூட்டத்தில் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் திருமலை மாவட்ட தொடர்பக பொறுப்பாளர் ரவி. கவிஞர் வாஞ்சிநாதன் வடமராட்சி மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 14 | 03 | 1968



வீர மரணம் 03 | 11 | 1990

லெப். காஞ்சனா
(சறோஜினி கணபதிப்பிள்ளை)
திதி 24-10-90

தாயின் மடியில் தவழ்ந்து
தாயக மண்ணில் நடந்து
உரிமைக்காகப் போராடி
உயிரை ஈந்தாய் களத்தினிலே

சொந்த மண்ணை மீட்டெடுக்குமுன்
சோர்ந்து தளர்ந்தனையோ - காஞ்சனா

## சமாதான மாநாட்டில்; சகலரும் கலந்து கொள்வர்

- ஜேம்ஸ் பேக்கர்

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும்கலந்து கொள்வார்கள் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேக்கர் மட்ரிட்டில் நடைபெற்ற நிருபர்கள் மாநாட்டின்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக சிரியாவுக்கு விஜயமொன்றை மேற் கொண்டு சிரிய உப ஜனாதிபதியுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார்.

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை
### அமைய திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தொழில் முன்னேற்ற திட்டங்களை விரிவடைய நடவடிக்கை எடுத்துள்ளது. கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை நடாத்துவதற்கான திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

அ. விவசாயம் — ஆ. நெசவு வேலை
இ. மீன்பிடி — ஈ. தோற்பொருள் உற்பத்தி
உ. தொழிற்கல்வி — ஊ. வலது குறைந்தோர்க்கான சுயதொழில்

அவ்வத்துறையில் போதிய தேர்ச்சி, அனுபவம், வலது குறைந்த ஆற்றல் பெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். ஊதியம், சிறிகாயினும் சேவை மனமுள்ளோர் விரும்பத்தக்கது. 25-10-91 க்கு முன் விண்ணப்பிக்கவும் 26-10-91 முற்பகல் 9-00 மணிக்கு கிளை அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர் பட்டியல் கிளை அலுவலகத்தில் 25-10-91 (பிற்பகல் 4-00 மணிக்கு) வெளி யிடப்படும்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். — கௌரவ செயலாளர்
18-10-91 (B/3370)

நினைவு கூருகின்றோம்...

1991-10 23





### வாகன வாடகைக்கான கூறுவிலைகோரல்

கொழும்பு, அநுராதபுரம், வவுனியா, கஞ்சி மங்களிலிருந்து பசளை, விவசாய இரசாயனப் பொருள்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றி

...ரம் என்பன ...
...றன. அரிசி பதின்மூன்று
ரூபா என்பது சதத்திற்கும்,
சீனி இருபத்திநான்கு ரூபா
தொண்ணூறு சதத்திற்கும்
சவர்க்காரக்கட்டி ஏழு ரூபா
விற்குமாக நியாயவிலைக்கு
விற்பனை செய்யப்படுகின்
றது. (88) 22)

சொந்த மண்ணை மீட்டெடுக்கும்
சோர்ந்து தளர்ந்தனையோ - காஞ்சனா
நீ மறைந்து ஆண்டொன்று சென்றாலும்
நீங்காது உன் நினைவு எம் மனத்தினிலே.

காந்தி வீதி,
வல்வெட்டித்துறை. (R/1864)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# 45-வது நினைவு நாளும்
# வீர வணக்கமும்

வீர ஜனனம் 25 05-72





வீர ஜனனம் 24-01-77

**வீரவேங்கை திலீப்**
மார்க்கண்டு இளங்கீரன்
(ஆவரங்கால் புத்தூர்)

**2-வது லெப். நேசன்**
சிவநேசன் சிவசங்கர்
(மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்)

வீர மரணம்
09-09-91

மண்ணைக் காவிய மான
மருத்துவ வேங்கைகளே!
இன்று
உங்களது வீரமரணத்தின்
நாற்பத்தைந்தாவது நினைவு நாள்
நீங்கள்
வீரத்தின் உயிர்வாக
உயிர்த்துக்கொண்டிருப்பதால்
நாமும்
உங்களுக்கு ஒளித்தீபம்
ஏற்றுகிறோம்
எண்ணெய் ஊற்றியல்ல
எமது கண்ணீரை வார்த்து,
உங்களுக்கு அஞ்சலியாக
ஈழத்தின் வரைபடத்தை
வரைந்துகொண்டிருக்கிறோம்
கண்ணீரால் அல்ல
எமது இரத்தத்தால்.

- நண்பர்கள்

R/1365

இல் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்ற வருவதற்கு லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பின்வரும் விபரங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும்.
2. ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.
3. கோரப்படும் லொறிக்கூலி
   - 3 1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி முழுத்தூரத்துக்குமான கூலி
   - 3 2 கொழும்பு - புதுக்குடியிருப்பு/தண்ணீரூற்று
     அனுராதபுரம் - புதுக்குடியிருப்பு/தண்ணீரூற்று
     வவுனியா - புதுக்குடியிருப்பு/தண்ணீரூற்று
4. தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

இ. தர்மகுலசிங்கம்
அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு மாவட்டம்

(B/3360)

**Sri Lanka Red Cross Society**
**Mullaitivu Branch**

## Dental Surgeon & Dental Therapist

*Wanted Dental Surgeon and Dental Therapist for Mullaitivu District. Please apply before 25-10-91 and appear for interview on 26-10-91 at 1 p.m. in our Branch Office.*

Hony. Secretary
Sri Lanka Red Cross Society Jaffna Branch

75, KANDY ROAD,
JAFFNA.

(B/3371)

## கமலா கப்டன் றேமண்

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் கோப்பாயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். வீரமணி** (சந்திரசேகரம் தமிழ்ச்செல்வன் - ஆலங்கேணி)

**சைமன்** (கனகலிங்கம் ஜெகசுதர்சகுமார் - கொட்டடி, யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் வீரமரணமெய்திய

**சுகந்தன்** (சிற்றம்பலம் பரஞ்சோதி - பனிகுளம்)

1989 ஆம் ஆண்டு இனிதொச்சியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த இரு தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு குப்பிளான் பகுதியில் பலாலி முகாம் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**கப்டன் றேமண்** (ராமானுஜம் சீதாராம் - சீதாராம் வீதி, புலோலிதெற்கு. பருத்தித்துறை)

பலாலிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**கமலா** (நந்தினிசோதி - வண்ணான்குளம், முல்லைத்தீவு)

பிபிலையில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமெய்திய

**சகாதேவன்** (அருளம்பலம் கந்தசாமி - புல்லுமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3368)

இல்லை. அதேவேளை அமைச்சர் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையில் அக்கறை காட்டுவதைவிட ஐ. தே. கட்சியின் ஆட்சியைப் பாதுகாப்பதிலேயே தீவிர கவனம் செலுத்தி வருகின்றார். இதன் மூலம் தனது அமைச்சர் பதவியையும் பாதுகாப்பதில் அக்கறையாகவுள்ளமை தெரிகின்றது.

அதேவேளை சிங்களப் பேரினவாதத்தின் உண்மைச் சொரூபத்தை விளக்கிச் சொல்லாமல் — சிலவேளை விளங்கிக்கொண்டும் விளங்கிக் கொள்ளாததுபோன்றும் மிகவும் சிக்கல் நிறைந்ததும் சிங்களப் பேரினவாதிகளினால் ஜீரணிக்க முடியாததுமான இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் இவ்வேளைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசவும் முற்படுகின்றார்.

இனப்பிரச்சினை தொடர்பாக தொண்டமான் முன்வைத்த தீர்வுத் திட்டங்கள் தமிழரால் ஏற்றுக்கொள்ளப்பட முன்னரே பேரினவாத சக்திகள் பெரும் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளன. இந்த எதிர்ப்புக் குரலுக்கு பயந்த சிறிலங்கா அரசாங்கம் தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கும் அமைச்சரவைக்கும் தொடர்பில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்துவருகின்றது.

அதேவேளை பத்திரிகையாளர் கேள்விக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க தீர்வுத்திட்டங்கள் யாவும் தொண்டமானிற்கு சொந்தமானவை அதில் இணக்கப்பாடுகள் ஏற்படின் அவை சர்வகட்சி மாநாட்டிலும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவிற்கும் விடப்படும் என்றார்.

அத்தோடு சமய நிலையங்களிலும் வெளியிடங்களிலும் ஆற்றப்படும் உரைகளை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்றார். ரணிலின் இக்கூற்று அமைச்சரவையில் தொண்டமானுக்கு இருக்கும் 'செல்வாக்கை' காட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமான் தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் எவ்வளவு தூரம் தன்னால் வெல்ல முடியும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். சிறிலங்கா ஜனாதிபதியும் சிங்கள அமைச்சர்களும் பொது இடங்கள், மதநிகழ்ச்சிகளில் பேசினால் அவை பிரகடனங்கள். அதே அமைச்சரவையில் உள்ள தொண்டமான் பேசினால் அது வெற்றுப்பேச்சு இதனைத் திரு. தொண்டமான் முதலில் புரிந்துகொண்டு தனது பலத்தை முதலில் ஆட்சியாளர்களுக்குக் காட்ட வேண்டும் பின்னர் தோட்டத் தொழிலாளர் பண்டிகை முற்பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். அதன் பின்னரே பலத்துடன் நின்று தமிழர் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வைப் பற்றிப் பேசவேண்டும். அப்பொழுதே தொண்டமானின் பேச்சு தெருவில் நின்று பேசும் வெற்றுப் பேச்சு அல்ல என்று தெரிய வரும். இதனைத் திரு. தொண்டமான் செய்வாரா?

[illegible] வுகளை விதைத்தது.

விடுதலைப் போராட்டம் தமிழ் மண்ணில் வீறுகொண்டிராத அந்தக் காலத்திலேயே பாலாவின் மனதிலும் இந்த மண்ணின் விடிவிற்காகப் போராடும் போராளியாக மாற வேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. இந்த மண்ணில் இராணுவ அடக்குமுறைகள் அதிகரிக்கத் தொடங்கிய போது பாலா தனது சகோதரன் முறையான குலம் என்பவருடன் சேர்ந்து புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டான்.

புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாம்.

பொன்னம்மான் - புலேந்திரம்மான் என்ற உன்னதமான இரு தளபதிகளின் வழிநடாத்தலில் புதிய போராளிகள் உருவானார்கள் அந்தப் பயிற்சி முகாமின் சிறந்த வீரர்களில் பாலாவும் ஒருவன்; ஒரு கிராமத்து விவசாய இளைஞனுக்குரிய உறுதியான உடல் கடுமையான பயிற்சிகளுக்கு இலகுவாக இடம்விட்டது பாலா எல்லாப் பயிற்சிகளையும் திறமையாகச் செய்தான். அந்தப் பயிற்சிமுகாமில் நின்ற பழைய - புதிய போராளிகள் அனைவரிலும் மரதன் ஓட்டத்தில் பாலாவே முதலாவதாக வருவான்.

பயிற்சி முடிந்தபின் 1984 இன் பிற்பகுதியில் பாலா வன்னியில் களத்தில் இறங்கினான். எதிரிக்கு எதிராக பல போர் முனைகளில் பாலாவும் ஒருவனாகக் கலந்துகொண்டான்.

எங்கள் விடுதலைப் போராட்டம் உறுதியாக வளரத் தொடங்கியபோது, எதிரியோ அதை அடக்குவதற்காக அல்லது அழிப்பதற்காக தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யத் தொடங்கினான்.

ஒன்று விழுந்து வெடித்ததால் பாலாவிற்கு அருகில் நின்ற மாமா, தளரால் என்ற இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். ஆனால் அவர்களுக்கு நடுவே நின்ற பாலா அதிசயிக்கத்தக்கவாறு காயம் எதுவும் இன்றியே தப்பிவிட்டான். இத்தாக்குதலின் பின்பு காயமடைந்த போராளிகளைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதில் பாலா கடுமையாக உழைத்தான்.

இதன் பின்பு, கிளிநொச்சியில் ஒரு பயிற்சி முகாமில் பயிற்சியாளராக பாலா கடமையாற்றினான். அந்தப்பயிற்சி முகாமிலிருந்து தேசத்தின் தேவைக்காக புதிய போராளிகள் உருவாகி வெளிவந்தார்கள் பாலாவிடம் எல்லோராலும் விரும்பப்படும் நற்குணாம்சங்கள் இயல்பாகவே இருந்தன.

எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்லும் தன்மை. தனக்கு தெரியாதவற்றை தெரிந்தது போல் நடிக்காமல் எனக்கு விளங்கவில்லை அல்லது தெரியாது என்று கேட்டுத்தெரிந்து கொள்ளும் வஞ்சகமில்லாத இயல்பு. இழப்புகள் தவிர்க்க முடியாது என்பதை தெரிந்து கொண்டும் எந்தப் போராளிக்கும் எதுவுமே நடந்து விடக்கூடாது என்று தவிக்கும் மன இயல்பு என சில குணாம்சங்கள் தாடியில் மறைந்து போய் இருந்தது.

அவனது இந்த இயல்புகளே அவனிடம் எல்லா போராளிகளும் அளவு கடந்த அன்பைச் செலுத்த காரணமாயிற்று.

வன்னியில் சிங்களப் படைகளுக்கெதிரான பல போர்க் களங்களில் தாடி பாலா பங்கு பற்றிக் கொண்டிருந்தான் அந்த நேரங்களில் மணலாற்

[illegible] லிக்கு வந்தான் அங்கு மேஜர் மகேந்திரனுடன் இணைந்து நின்றான். பயிற்சி முகாம் காலம் தொட்டே அவர்கள் இருவருக்கும் இடையே மிகவும் நெருக்கமான நட்பு இருந்தது அவர்களுக்கிடையேயான அன்பும் - பாசமும் எல்லோரையுமே வியக்க வைக்கும்.

இந்தியப் படைகளுடனான போர் தொடங்கிய போது

[illegible] போதும் —

[illegible] - இந்தியர்களும் அவர்களை சுற்றி நின்று துப்பாக்கிகளை இயக்கும் பொழுதும் —

அவனும் அவனுடனேயும் [illegible] போராளிகளும் விழும் பொழுதும் — அந்த M16 துப்பாக்கி அவனுடனேயே பிரியாமல் இருந்தது.

— வசந்தன்

## கொக்குத்தொடுவாயில்

# 32இராணுவத்தைபலியிட்டும் மீட்க முடியவில்லையே

## லலித் அத்துலத்முதலி ஏக்கம்

1986ஆம் ஆண்டு நான் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியை இரண்டு இராணுவத்தினரை மட்டும் நிறுத்தி பிடித்தோம்; ஆனால் இப்போது கொக்குத் தொடுவாய் பகுதியை மீட்கச் சென்ற படையினரில் முப்பத்திரண்டு பேர் மரணமடைந்தனர் என பத்திரிகைகள் கூறுகின்றன. இதற்கு காரணமாக இருந்தது யார் என்று இரியகொடயில் நடைபெற்ற ஐ. தே. க. அதிருப்தியாளர்களின் கூட்டத்தில் பேசிய லலித் அத்துலத்முதலி கேள்வி எழுப்பினார். அவர் மேலும் பேசுகையில் இந்திய அமைதிப்படையினர் வெளியேறிய பின்னர் அந்த இடம் இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்தியப் படையினர் விட்டுச்சென்ற இடைவெளியை புலிகளைக் கொண்டு பூரணப்படுத்தினர் எனவும் தெரிவித்தார்.

## தென்மராட்சியில் புனர்வாழ்வுக் கழகம் உதவி

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தென்மராட்சிப் பகுதியான கொடிகாமம், வரணி, மந்துவில் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்களை தென்மராட்சிப் பகுதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.

இப்பகுதிகளில் சுமார் இரண்டாயிரம் குடும்பத்தினருக்கு இதுவரை வழங்கியுள்ளது இத்துடன் வடமராட்சி இடம் பெயர்ந்தோர் நலன்காக்கும் பிரிவும் அகதிகளின் நலன் கருதி கொடிகாமத்தில் ஒரு காரியாலயமும் திறக்கப்பட்டுள்ளது.(86)

2. சிறுகதை

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதன வாகவும் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் எழுத்துத்தாளில் 8 பக்கங்களுக்கு மேற்படாது அமைதல் வேண்டும்.

3. கவிதை

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பும் நேரம் 3 நிமிடங்களுக்கு குறையாமலும் 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்

4. புலிகளின் குரல் பற்றிய விமர்சனம்

கடந்த ஒரு வருட காலமாகப் 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனம் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பு :

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும்.

ஆக்கங்களின் மூன்று பிரதிகள் அனுப்பி வைப்பதுடன் அவை தமது சுய முயற்சியில் எழுதப்பட்டதென்றும் இதற்குமுன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும்.

ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும்.

விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

பொறுப்பாளர்
"புலிகளின் குரல்"
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(B/3369)

...லைத் தொடுத்தனர். இம் மோதல் நேற்று பிற்பகல் வரையிலும் நீடித்தது. விடுதலைப் புலிகளின் தாக்குதலின் மத்தியிலும் சிறிது சிறிதாக நகர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் கரையோரப்பாதை ஊடாக சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதியை நேற்று பிற்பகல் வந்தடைந்தனர்.

வீரவணக்கம

பொலிசார்மீது நடாத்தப்பட்ட தாக்குதலின்போது இருதயபுரத்தைச் சேர்ந்த சரவணையாளன் அல்லது ஜெயா (கந்தையா ஜெயக்குமார்), திலீஸ்வரன் ஜெகன் (அன்ரனி சந்திரகுமார் மட்டக்களப்பு என்ற மூன்று போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

...யிட்டுள்ளன. (ச)

குண்டு வீச்சினால்

தீப்பற்றி எரிந்ததாக அங்கிருந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

மேலும், குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதலைத் தொடர்ந்து பத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளதாகவும், பலர் கடல் வழியாக யாழ்ப்பாணம் தப்பி வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (88) (24)

எந்த ஒரு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஐக்கிய சோசலிச முன்னணி மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். இந்த அறிவிப்பினை வெளியிட்டதாகவும் இந்திய வானொலி குறிப்பிட்டது.

...மகேந்திரராசா ...ர் பலகையைத் திரை நீக்கம் செய்துவைத்து வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜனனி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

...மாதமும் 27 ஆம் திகதிக்கு முன் பொழிப்பு அனுப்பாத கோட்டநிதி உதவியாளர்களுக்கு நிதி உதவியாளருக்கான மேலதிகக் கொடுப்பனவில் 50 வீதத்தை வெட்டுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நடைமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு அவர் சகல கல்விப் பணியாளர்களுக்கும் கட்டளை இட்டுள்ளார்

களுத்துறை

...வும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதுடன் தடுப்பு காவல்பற்றி காலவரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை இவற்றை ஆட்சேபித்து இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர்.


யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்)
சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203


## மரண அறிவித்தல்

### மகேந்திரராஜன்

(தமிழீழ ஆய்வு நிறுவனம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவருமான மகேந்திரராஜன் 22 10-91 இல் காலமானார். இவர் ஆ. சாமிநாதன் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), திருமதி மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் புதல்வரும் ரேவதி (பிரான்ஸ்), தட்சாயினி (கொழும்பு), மாலினி (கனடா), லோகேந்திரன் (இந்தியா), சயந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாஹரிகரன் (குட்டிக்கண்ணா), கலைவாணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரரும் சி. உமாகாந்தன் (ஹட்டன் நாஷனல் வங்கி, பிரதான கிளை, கொழும்பு) என்பவரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 - 10 - 91 இல் காவடி வீதி, மானிப்பாயில் பிற்பகல் 1·00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல் ;
ஆ. சாமிநாதன்

(B/3372)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.